**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சாத்தான்குளம்.**
**முன்னிலை : திரு. சா. வரதராஜன், பி.ஏ., பில்., (கூ.மு.பொ)**
**நீதித்துறை நடுவர், சாத்தான்குளம்**
**2024 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 14 ஆம் நாள் வியாழக்கிழமை**
**Crl.M.P.No.2942 of 2024 in DV. No. 6 of 2021**
*********

திரு. கவிராஜ் S.ராஜ்குமார்,
த/பெ. K.A. சண்முகசுந்தரம்,
சுவாமி சன்னதி தெரு,
சாத்தான்குளம்,
சாத்தான்குளம் தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம். . . . மனுதாரர்/எதிர்மனுதாரர்

...எதிர்...

திருமதி. சாந்தி, வயது 53
க/பெ. கவிராஜ் S. ராஜ்குமார்,
68B, வடக்கு இரத வீதி,
சாத்தான்குளம்,
சாத்தான்குளம் தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம். . . . எதிர்மனுதாரர்/மனுதாரர்

மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்: திருமதி. R. அமுதா, B.Sc., L.L.B.,
எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்: திரு. M.சூரியபகவன் தாஸ், B.A., B.L.,

**<u>உத்தரவு</u>**

**<u>மனுச்சுருக்கம்:-</u>**

1. இந்த மனுவானது மனுதாரர்/எதிர்மனுதாரர்/கணவரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 32, விதி 15 மற்றும் பிரிவு 28(2) குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் எதிர்மனுதாரர்/மனுதாரர்/மனைவியை மருத்துவக் குழுவின் பரிசோதனைக்கு அனுப்பி, அறிக்கை பெற உத்தரவு பிறப்பிக்க கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிர்மனுதாரர்/மனைவி திருமணத்திற்கு முன்பே மனநலம் பாதிக்கப்பட்டு தொடர் சிகிச்சை பெற்று வந்தார். அதை மறைத்து மனுதாரர்/கணவருக்கு திருமணம் செய்து வைத்துள்ளார்கள். மருத்துவரின் அறிவுரைப்படி எதிர்மனுதாரர்/மனைவி நாள்தோறும் இரண்டு வேளை தொடர்ந்து மருந்து உட்கொள்ள வேண்டும். தரப்பினர்களின் வளர்ப்பு மகளின் திருமணத்திற்கு பிறகு நெருங்கிய உறவினர்களின் துர்போதனைகளை கேட்டுக்கொண்டு எதிர்மனுதாரர்/மனைவி அவருடைய மனநலம் சிகிச்சைக்கான மருந்துகளை உட்கொள்வதை நிறுத்தி விட்டார். அதனால், அவருக்கு நோயின் தீவிரம் அதிகரித்து மனுதாரர்/கணவருடன் வீணாக தகராறு செய்து பிரிந்து வாழ்ந்து வருகிறார். மேலும், எதிர்மனுதாரர்/மனைவி சுயநினைவு இல்லாமல், மற்றொருவரின் தூண்டுதலுக்கு இணங்கி, இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். ஆகையால், அவரை மருத்துவக் குழுவின் பரிசோதனைக்கு அனுப்பி வைத்து, அவருடைய மனநலம் சம்பந்தமான உண்மையை இந்த நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவர இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிருரை சுருக்கம்:-</u>**

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2024.11.14 18:10:35 +0530

3. அதை ஆட்சேபித்த எதிர்மனுதாரர்/மனைவி தாக்கல் செய்துள்ள எதிருரையில், இந்த வழக்கை 5 மாதத்திற்குள் முடிக்க வேண்டும் என்று மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றம் 30.11.2022 ஆம் தேதி ஆணையிட்ட பிறகும் மனுதாரர்/கணவர் நீதிமன்றத்திற்கு எவ்விதமான ஒத்துழைப்பும் வழங்காததால் இந்த வழக்கு முடிக்கப்படாமல் இருக்கிறது. மனுதாரர்/கணவர் காலத்தை கடத்திக் கொண்டு, இந்த நீதிமன்றத்தின் மீது துணிகரமாக பொய்யான குற்றம் சொல்லி, வழக்கை வேறு நீதிமன்றத்திற்கு மாற்ற மாண்புமிகு முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த Cr.M.P. No. 7126/2022 ஆனது 08.09.2023 ஆம் தேதிய உத்தரவின்படி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

4. காலத்தை கடத்த வேண்டும் என்ற நோக்கத்தில் எதிர்மனுதாரர்/மனைவிக்கு மனநிலை பாதிக்கப்பட்டுள்ளது என்ற பொய்யான குற்றச்சாட்டினை மனுதாரர்/கணவர் உருவாக்கி, அதன் பேரில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்/மனைவி தொடர்ந்து இந்த நீதிமன்றத்தில் முன்னிலையாகி வருவதில் இருந்தும், முறையான வாதுரைகளை நீதிமன்றத்தில் எடுத்துரைப்பதில் இருந்தும் அவர் புத்தி சுவாதீனத்துடன் நடந்து வருகிறார் என்பது தெளிவாக அறிந்து கொள்ளமுடிகிறது. ஆகையால், இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**பரிசீலனை:-**

5. **மனுதாரர்/கணவர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?**

6. இருதரப்பிலும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் மற்றும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்து மூலமான வாதுரை கவனமாக பரிசீலனை செய்யப்பட்டன.

7. மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதத்தின் போது, எதிர்மனுதாரர்/மனைவி சரியாக மருந்துகளை உட்கொண்டு வந்தால் பிரச்சனை எதுவும் இருக்காது என்றும், எதிர்மனுதாரர்/மனைவிக்கு Mental Disorder எதுவும் கிடையாது என்றும் சமர்ப்பித்தார். மேலும், பிரிவு 105 Mental Health Care Act 2017 இன் படி, நீதிமன்ற நடவடிக்கையில் இருக்கும் ஒரு தரப்பினர் புத்திசுவாதீனமற்றவர் என்ற பிரச்சனை எழுப்பப்பட்டு அதை மற்றொரு தரப்பினர் மறுக்கும் பொழுது அந்த நபரை மருத்துவக் குழுவின் ஆய்விற்காக அனுப்ப வேண்டும் என்றும் சமர்ப்பித்து, அவருடைய வாதத்திற்கு ஆதரவாக மாண்புமிகு டெல்லி உயர்நீதிமன்றம் Ankur Abbot vs Ekta Abbot on July 2023, மாண்புமிகு உச்சநீதிமன்றம் Sharda vs Dharmpal வழக்கில் உள்ள முன்தீர்ப்புகளை சுட்டிக்காட்டி எதிர்மனுதாரர்/மனைவியை மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். தன்னுடைய வழக்கிற்கு ஆதரவாக எதிர்மனுதாரர்/மனைவிக்கான மருத்துவரின் மருந்து பரிந்துரை நகல்களை சுட்டி மனுதாரர்/கணவர் தாக்கல் செய்தார்.

8. அதற்கு பதிலுரைத்த எதிர்மனுதாரர்/மனைவியின் மனுவின் வழக்கறிஞர் எதிர்மனுதாரர்/மனைவி தொடர்ந்து இந்த வழக்கில் இந்நீதிமன்றத்தின் முன்பு முன்னிலையாகி வருகிறார் என்றும், அவருடைய நடத்தை குறித்து இந்த நீதிமன்றம் ஏற்கனவே அதன் நடவடிக்கை மூலம் கருத்து தெரிவித்துள்ளது என்றும், அவர் இந்நீதிமன்றத்தில் நடந்து கொள்ளும் விதத்தில் இருந்து சுயமான மனநிலையுடன் இந்த வழக்கை நடத்தி வருகிறார்

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2024.11.14 18:10:39 +0530

என்பது தெளிவாகும் என்றும் சமர்ப்பித்து, இதுநாள் வரையில் எதிர்மனுதாரர்/மனைவிக்கு எவ்விதமான பராமரிமரிப்புத் தொகையையும் மனுதாரர்/கணவர் வழங்காமல் இருந்து வருவதால் இந்த மனுவை தள்ளுபடி செய்வதோடு, எதிர்மனுதாரர்/மனைவி தாக்கல் செய்துள்ள இடைக்கால வாழ்க்கைப் பொருளுதவி மனுவில் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

9. DVC.No.6/2021 வழக்கின் மனுதாரரரான எதிர்மனுதாரர்/மனைவி, அந்த நடவடிக்கையில் அவருடைய நிரூபண வாக்குமூலத்தை 15.10.2024 ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, அவர் மூலம் ம.சா.ஆ.1 முதல் 4 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்துள்ளார். பின்னர், 17.10.2024 ஆம் தேதி எதிர்மனுதாரர்/மனைவி அவருடைய கூடுதல் நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்து ம.சா.ஆ.5 முதல் 19 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்துள்ளார். அவர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி மேற்படி சாட்சியம் அளித்ததில் இருந்து அவர் சுயமான மற்றும் தெளிவான மனநிலையில் இவ்வழக்கை நடத்தி வருகிறார் என்பதில் இந்நீதிமன்றத்திற்கு எவ்விதமான ஐயமும் இல்லை.

10. மேலும், அவர் தொடர்ச்சியாக இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி நீதிமன்றம் கேட்கும் கேள்விகளுக்கு பதில் அளித்து வழக்கு விசாரணையில் ஆக்கப்பூர்வமாக கலந்து கொள்வதில் இருந்து அவர் இவ்வழக்கை தொடர்ந்து நடத்த முடியாத அளவிற்கு மனநிலை பாதிப்பில் இருந்து வருகிறார் என்று கூறத்தக்க வகையில் இல்லை.

11. எதிர்மனுதாரர்/மனைவி சுயநினைவுடன் இருந்து வருகிறார் என்பதும், இந்த வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் அவர் சுயநினைவுடன் இருந்து வந்தார் என்பதும் மனுதாரர்/கணவர் DVC.No.06/2021 இல் தாக்கல் செய்துள்ள எதிருரையில் உள்ள, இதன் கீழே சுட்டிக்காட்டப்படும் சங்கதிகளில் இருந்து தெரியவருகிறது.

> **“18. . . . . . . உபயமனுதார்களின் வளர்ப்பு மகளின் திருமணம் 02.07.2020 தேதியில் நடைபெற்றது. திருமணத்தின் போது மனுதாரர் தனது நகைகள் எதுவும் கோமதிக்கு கொடுக்கவில்லை. மாறாக எதிர்மனுதாரரின் 2 - ம் தார மனைவி தனக்கு பாத்தியப்பட்ட 20 சவரன் நகையை கொடுத்துள்ளார். . . . . . . வளர்ப்பு மகளின் திருமணத்தை இரண்டாம் தர மனைவியும், அவரது மகளுமே முன் நின்று நடத்தினார்கள். மனுதாரரும் அதற்கு இசைந்து உடன் நின்றார். வாஸ்தவத்தில் வளர்ப்பு மகள் திருமணம் நல்லபடியாக நடந்ததற்கு 2 ம் தார மனைவியே முழு காரணம் ஆவார். வளர்ப்பு மகளின் திருமணத்திற்கு பின்பு மனுதாரரின் நெருங்கிய உறவினர்களின் துர்போதனைகளை கேட்டுக்கொண்டு, மனுதாரர் மனநல சிகிச்சைக்கான மருந்துகள் உட்கொள்ளுவதை நிறுத்தியுள்ளதுடன், எதிர்மனுதாரருடன் தகராறு செய்து வந்தார்.**
>
> **19. . . . . . மனுதாரரின் வற்புறுத்தலால் கடந்த 26.11.2020 அன்று E or S நிலையில் இருந்து தான் விலகி கொள்வதாகவும், மனுதாரரே அதை இயக்கி கொள்ளலாம் என IOB சாத்தான்குளம் வங்கிக்கு எதிர்மனுதாரர் எழுத்து பூர்வமான அனுமதி அளித்து, அதன் பேரில் மனுதாரரே லாக்கரை தனியாக இயக்கி வந்தார். மனுதாரரின் வற்புறுத்தலின் பேரில் எதிர்மனுதாரரும், மனுதாரரும்**

S VARATHARAJAN

Digitally signed by S VARATHARAJAN
Date: 2024.11.14 18:10:43 +0530

**சேர்ந்து 15.12.2020 தேதியில் மேற்படி லாக்கரை மூடி, அதில் வைத்திருந்த நகைகளை மனுதாரரே எடுத்து சென்றுவிட்டார். அதன் பிறகு மனுதாரர் 2021 ஆம் ஆண்டு மேற்படி வங்கியில் ரூ.25,000/- செலுத்தி தனது பெயரில் தனியாக 174 என்ற எண் கொண்ட வங்கி லாக்கர் ஆரம்பித்து தனது நகைகளை வைத்து இருந்தார். அதன் பின்னர் கடந்த 18.10.2021 தேதியில் மேற்படி லாக்கரையும் மூடி விட்டு தனது தங்க நகைகளையும், வெள்ளி பொருட்களையும் எடுத்து சென்றுவிட்டார். உடன் 28.10.2021 அன்று நகைகளை கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.**

**20. அதன் பின்னர் மனுதாரர் திருச்செந்தூர் கரூர் வைஸ்யா வங்கியில் தனது வளர்ப்பு மகளின் கணவரான திரு. செல்வ சுரேஷ் என்பவரின் பெயரில் இருந்து வந்த "யூனிட் 11" என்ற லாக்கரில் வைத்து இருந்தார். அந்த லாக்கரையும் கடந்த 02.07.2022 தேதியில் முடித்து விட்டு தனக்கு பாத்தியப்பட்ட அனைத்து நகைகளையும், பொருட்களையும் தனது பொறுப்பிலேயே வைத்துள்ளார். இதற்கு மாறாக மனுதாரருக்கு பாத்தியப்பட்ட நகைகள், பண்ட பாத்திரங்கள், கணினி, பிரின்டர் போன்ற சாமான்களை எதிர்மனுதாரர் எடுத்து சென்றுவிட்டதாக மனுவில் கூறியிருப்பது துணிகரமான பொய் ஆகும். மனுதாரருக்கு பாத்தியப்பட்ட நகைகளில் ஒரு பகுதியை விற்பனை செய்து தனது வளர்ப்பு மகளின் கணவர் பெயரில் தேரிகுடியிருப்பு ஊரில் 77 செண்ட் விஸ்தீரணம் கொண்ட நிலத்தை கிரையம் பெற்றுள்ளதாக எதிர்மனுதாரர் அறிகிறார்.**

**22. . . . . . . திருமணம் முடிந்ததிலிருந்து 28 ஆண்டுகள் மனுதாரரை எதிர்மனுதாரர் நல்ல முறையில் பராமரித்து மகிழ்ச்சியாக குடித்தனம் நடத்தி உள்ளார். தற்போதும் மனுதாரருடன் சேர்ந்து வாழ எதிர்மனுதாரர் ஆவலாகவும், விருப்பவுமாக இருந்து வருகிறார்."**

ஆகையால், எதிர்மனுதாரர்/மனைவி நல்ல சுயநினைவோடு இருந்து தான் இந்த வழக்கை நடத்தி வருகிறார் என்பது தெளிவாவதால் அவரின் மனநிலையை ஆய்வு செய்ய அவரை மருத்துவக் குழுவின் பரிசோதனைக்கு அனுப்ப வேண்டிய அவசியமில்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

12. மனுதாரர்/கணவர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட மாண்புமிகு உச்சநீதிமன்றம் தீர்ப்பை கவனமாக பரிசீலனை செய்த போது, அது விவாகரத்து தொடர்பானது என்பதும், விவாகரத்து வழக்கு நடவடிக்கையில் தரப்பினர் ஒருவருக்கு சரி செய்ய முடியாது மனநோய் இருந்து, அது விவாகரத்து கோருவதற்கு ஒரு காரணமாக இருக்கும் போது, அந்த நபரை மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்புவது அவசியமானது என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால், இந்த வழக்கில் அவ்வாறான விவாகரத்து தொடர்பான பரிகாரம் எதுவும் கோரப்படவில்லை. மனுதாரர்/கணவரின் செயலால் கணவரின் குடும்ப உறவு தொடர்பான நடவடிக்கையில் பாதிக்கப்பட்ட அவருடைய மனைவியான எதிர்மனுதாரர், சட்டப்படி அவருக்குள்ள உரிமையை கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார். ஆகையால், இந்த வழக்கின் பொருண்மையும் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ள வழக்கின் பொருண்மையும் வித்தியாசமானது என்பதால் அந்த தீர்ப்பு இவ்வழக்கின் சங்கதிகளுக்கு பொருந்துவதாக இல்லை.

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2024.11.14 18:10:49 +0530

13. மாண்புமிகு டெல்லி உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு இவ்வழக்கு சங்கதிகளுக்கு பொருந்துமா? என்று ஆய்வு செய்வதற்கு முன்பு Mental Health Care Act பிரிவு 105 இவ்வழக்கு பிரச்சனைக்கு பொருந்துமா? என்பதை ஆய்வு செய்ய வேண்டும். அந்தச் சட்டத்தின் படி பிரிவு 2s “Mental illness” என்பதை கீழ்க்கண்டவாறு வரையறை செய்கிறது.

> “Mental illness” means a substantial disorder of thinking, mood, perception, orientation or memory that grossly impairs judgment, behaviour, capacity to recognise reality or ability to meet the ordinary demands of life, mental conditions associated with the abuse of alcohol and drugs, but does not include mental retardation which is a condition of arrested or incomplete development of mind of a person, specially characterised by sub-normality of intelligence”

மேற்படி வரையறைக்குள் எதிர்மனுதாரர்/மனைவி வருகிறார் என்பது மனுதாரர்/கணவரின் வழக்கு அல்ல. அதற்கான ஆவணம் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை, தேவையான வாதுரைகளும் இல்லை. ஏற்கனவே இதன்மேலே DVC.No.06/2021 இல் மனுதாரர்/கணவர் தாக்கல் செய்துள்ள எதிருரையில் உள்ள சங்கதிகளை சுட்டிக்காட்டியதில் இருந்து எதிர்மனுதாரர்/மனைவி நல்ல மனநிலையில் இருந்து வருவது தெளிவாக தெரிவதால், அவர் Mental Health Care Act பிரிவு 2s இல் குறிப்பிட்டுள்ளபடி மனநலப் பிரச்சசனையில் இருக்கிறார் என்று கூறத்தக்க வகையில் மனுதாரர்/கணவரின் வழக்கு இல்லை. ஆகையால், மேற்படி சட்டத்தின் பிரிவு 105 மற்றும் மாண்புமிகு டெல்லி உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு இவ்வழக்கின் சங்கதிகளுக்கு பொருந்துவதாக இல்லை.

14. இதன்மேலே பரிசீலனை செய்யப்பட்ட இவ்வழக்கின் சங்கதிகளின் அடிப்படையில், மனுதாரர்/கணவர் தாக்கல் செய்துள்ள இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், அது வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்துவதற்காகவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் இந்த நீதிமன்றம் கருதி, மனு தள்ளுபடி செய்யவே தகுதியானது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவில், இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை**

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று, 14.11.2024 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2024.11.14 18:10:54 +0530

நீதித்துறை நடுவர்
சாத்தான்குளம் (கூ.மு.பொ)

Visit **ecourts.gov.in** for updates or download mobile app “**eCourts Services**” from Android or iOS